1993 ஏப்ரல் 28 ]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்வதில் கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் பெரும் பங்கு வகிக்கிறது. அண்மையிலே கூட, மத்திய அரசு கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் நிறுவுவதற்கு பல்வேறு மானியத் தொகைகளை வழங்கி வருகிறது. உங்கள் மூலமாக அமைச்சரிடத்திலிருந்து நான் அறிய விரும்புவது, மாநிலத்திலே எந்தந்த இடங்களிலே இது போன்ற கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் இருக்கிறது. அப்படி இல்லை என்றால், எதிர்காலத்தில் அமைக்கின்ற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது விரிவான பதிலை எடுத்து வைத்தேன். தோட்டக்கலை விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள், தாங்கள் உறபத்தி செய்யக்கூடிய பழங்களாக இருந்தாலும் சரி, காய்கறிகளாக இருந்தாலும் சரி, அவைகளைக் குளிர் பதன அறையிலே வைத்து பதப்படுத்தி, வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் ஏற்ற தொகை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அந்தத் திட்டத்தை அன்று அறிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அன்று அவைக்கு வரவில்லை. எனவே, அவர்களுக்கு, தெரிவதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே வசிப்பவர்களுக்கு காய்கறி, பழங்கள் கிடைக்கக் கூடிய அளவிலே, தரமான பழங்கள் கிடைக்க வேண்டிய அளவிலே அரசு ஒரு விரிவான திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 518, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

518—

சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம்.

*9946—திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுகக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சத்துணவு மையங்கள் கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் செயல்படுகின்றன. சத்துணவு மையத்திற்கு அருகாமையில் போதிய இடவசதி, தண்ணீர் வசதி, மண் வளம், பாதுகாப்பு மற்றும் பருவ நிலை ஆகியவை தேவைப்படுகின்றன. மேற்பட்ட அனைத்து வசதிகளும் உள்ள இடங்களில் காய்கறித் தோட்டங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் அமைந்துள்ள சத்துணவு மையங்களில், எத்தனை சத்துணவு மையங்களில் இவ்வாறு காய்கறித் தோட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன; இவைகள் இப்போது பயன்படும் வகையிலே நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 6,707 சத்துணவு மையங்களில் காய்கறித் தோட்டங்களும், 6,510 மையங்களில் முருங்கை மற்றும் பப்பாளி மரங்களும் வளர்க்கப்படுகின்றன. இவை 'சிடா' திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களிலும், மற்ற மையங்களிலும் இன்றைக்கு பயிரிடப்பட்டு காய்கறித் தோட்டம் பயிரிடும் அந்தப் பணியாளர்களுக்கு போனசாக ரூபாய் 50ம் வழங்கப்படுகின்றது. ஆகவே சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு இன்றைக்கு பயன் தரக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரியப்படுத்துகிறேன்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 6 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் கொடுத்து அதனை வளர்ப்பதற்கு ஊக்குவித்து வருகிறார்கள். அதைப்போல நம்முடைய தமிழகத்திலே உள்ள அனைத்து சத்துணவு மையங்களிலும் ஒவ்வொரு தென்னங்கன்று கொடுத்து அதை வளர்ப்பதற்கு நம்முடைய சமூக நலத்துறை ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி வேளாண்மைத் துறையோடு கலந்து பேசி முடிவு எடுத்து இலவசமாகக் கொடுப்பது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 519, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

519—

மலைவாழ் மக்களுக்காக கரியகோவில் — ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை.

*9454—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலை வாழ் மக்கள் நலன் கருதி கரியகோயிலிருந்து ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது சாலைப் பணி முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் கரிய கோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணி 7–9-1990ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் இதுவரையில் மூன்று அடுக்கு ஜல்லி நிரவல் செய்யும் பணி முடிவு அடைந்துள்ளது. மே மாதத்திற்குள்ளாக தார்ச்சாலை போடப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியகோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையானது தற்போது பராமரிக்கப்பட்டு தார்ச்சாலையாகப் போடப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை இதய தெய்வம் அவர்களுக்கும், நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து மிக விரைவாக இந்தப் பாதை செப்பனிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.